தமிழ்நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1973 ஆகஸ்ட் 8.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் தலைவரின் தீர்ப்பை எதிர்த்து வெளிநடப்பு செய்தது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு. மு.ப 9–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நேற்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள்,

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தீர்ப்பையும், நீங்கள் சட்டமன்றம் நடத்துகிற முறையையும், இந்தச் சட்டமன்றத்திற்கு ஆளும் கட்சி காண்பிக்கின்ற முறையையும் எதிர்த்து வெளியேறுகிறோம்."

என்ற வார்த்தைகளைக் கூறி வெளியேறியிருக்கிறார்கள். இது பேரவைத் தலைவருடைய மதிப்பையும், அதையொட்டி பேரவையினுடைய மதிப்பையும் குறைக்கின்ற செயலாகும், இழிவுபடுத்துகிற செயலாகும் என்பது திட்டவட்டமாகத் தெரிந்த ஒன்றாகும். நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளும், அதற்குத் துணை புரிகின்ற மற்ற நிகழ்ச்சிகளும் இந்தக் கருத்தைத் தெரிவிக்கின்றன என்பது இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். " Reflections upon the character or

---

[**குறிப்பு.**—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

actions of the Speaker may be punished as breaches of privilege." என்றும், "Reflections on the character of the Speaker and accusations of partiality in the discharge of his duty have been held as breaches of privilege." என்றும் திட்டவட்டமாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இந்த மன்றத்தினுடைய மாண்பைக் குறைக்கும் என்பதில் உறுப்பினர்களுக்கு எந்த விதமான ஐயமும் இருக்காது என்று நினைக்கிறேன்.

ஒரு முறை, இந்த அவையில் உறுப்பினராக இருந்த திரு. விநயகம் அவர்கள்—வேறு ஒன்றும் கூடச் சொல்லவில்லை—"தீர்ப்பை எதிர்த்துச் செல்கிறேன்" என்று சொல்லாமல், "I protest and walk out" என்று சொன்ன ஒரு நிகழ்ச்சிக்காகவே இந்த அவையிலிருந்து அவரை வெளியேற்றிய நிகழ்ச்சிகளெல்லாம் இந்தச் சட்டமன்ற வரலாற்றில் இருக்கின்றன. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் பேரவைத் தலைவருடைய தீர்ப்பை எதிர்த்து—வருத்தம் தெரிவிக்கவில்லை—கண்டித்துச் சென்றிருக்கிற நிகழ்ச்சி அவையுரிமையை மீறிய நிகழ்ச்சியாகும் என்று திட்டவட்டமாகத் தெரிகிறது என்றாலும், இது முதல் முறை என்ற காரணத்தால் அவர்மீது எந்தவிதமான கடுமையான நடவடிக்கையும் எடுக்காமல், இப்படிப்பட்ட நிகழ்ச்சி மேற்கொண்டு நடைபெறாமலிருக்குமாறு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள்—குறிப்பாக திரு. மதியழகன் அவர்கள்—பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற இந்தக் கருத்தோடு முடித்துக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது திரு. ஜேம்ஸ் அவர்கள் தொடர்ந்து பேசுவார்கள்.

(திரு. ஜே. ஜேம்ஸ் எழுந்தார்.)

திரு. கே. ஏ. மதியழகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

திரு. கே. ஏ. மதியழகன் : சபாநாயகர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

1973 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை. உட்காருங்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசலாம்.

(திரு. ஜே. ஜேம்ஸ் நின்றுகொண்டிருந்தார்.)

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்.)

திரு. கே. ஏ. மதியழகன் : சபாநாயகரை சபையே தேர்ந்தெடுத்திருக்கும்போது, அவரை மெஜாரிட்டியை வைத்துக்கொண்டு 'ரிமூவல்' பண்ணலாம் என்றால், மைனரிடியாக இருக்கிறவர்கள் என்ன செய்வது என்பதற்குப் பரிகாரம் இல்லையா? சபாநாயகரே விதிமுறையை மீறி நடக்கிறார் என்றால், அதற்கு விதிமுறை வேண்டியதில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறையையொட்டித்தான் நடக்கின்றது.

திரு. கே. ஏ. மதியழகன் : இங்கே ஒரு முறைகேடு நடைபெறுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு உறுப்பினர் முறைகேடாகப் பேசுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது சபாநாயகர் சொல்லிவிட்டார் என்றால், அதுவே முடிவானது என்று பொருள் ஆகுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது உங்களைப் பேச அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டசபையில் உறுப்பினர்கள் இருக்கிறோம், சபாநாயகர் இருக்கிறார். எல்லோரும் விதிகளுக்குப் பணிந்து நடக்கவேண்டும், மீறக் கூடாது என்கிற கட்டமையெல்லாம் இருக்கின்றன. உறுப்பினர்கள் சபாநாயகருக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்கிற கடமை எல்லாம் இருக்கின்றன. ஆனால், சபாநாயகர் தப்பு செய்தால் 'ரிமூவல்' பண்ணலாம் என்பதைத் தவிர மத்தியிலே ஒன்றுமே இல்லையா? மைனரிட்டியாக இருக்கிறவர்களுக்குச் சட்டசபையில் என்ன பரிகாரம்? ஒரு உறுப்பினர் தவறாகப் பேசுகிறார் என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்குப் பேச இடம் அளிக்கவில்லை. பேச இடம் அளிக்காதபோது நீங்கள் தொடர்ந்து பேசக் கூடாது.

திரு. கே. ஏ. மதியழகன் : சபாநாயகரைக் கேட்க விரும்புவது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் இதுதான். ப்ரிவிலெஜ் சம்பந்தமாக நம்முடைய விதிகளிலே 183-லிருந்து 192 வரையிலும் இருக்கின்றன. இந்த விதிகளை நான் பார்த்த அளவில், ஒரு உறுப்பினர் 'இம்மாதிரி ப்ரிவிலெஜ் இருக்கிறது' என்று எடுத்துச் சொல்வதற்கு முன்னால், சபாநாயகரே, தானாகவே ஒரு ப்ரிவிலெஜ் இஷ்யூ எழுப்பலாம் என்ற முறையில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், விதி 192 இருப்பது எனக்குத் தெரியும். அதிலே 'Notwithstanding anything contained in these rules, the Speaker may *suo motu* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation or report.' என்று இருக்கிறது. இந்த விதிகள் பூராவையும் பார்த்தால் ஏற்கெனவே நடந்திருக்கக்கூடிய விஷயங்கள் சபைக்குத் தெரிந்திருக்கும் நிலை இருக்கும் என்றால், அதைச் சபையில் எழுப்ப உறுப்பினருக்கு உரிமை உண்டு. அப்படி உறுப்பினர் ஏதாவது கொண்டுவரலாமே தவிர, சில குறிப்பிட்ட விஷயத்தில் நேரடியாக சபாநாயகர் அவர்களே கொண்டுவருவதென்பது இதுவரையிலும் ஒரு மரபாக இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. இம்மாதிரியாக ஏற்கெனவே இந்தச் சபையில் ஒரு நாளைக்கு முந்தி எழுப்பிய விஷயங்கள் சம்பந்தமாகச் சபாநாயகருடைய கவனத்திற்கு உறுப்பினர் கொண்டுவந்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும்.

The spirit of Rule 192 is not for raising any issue *suo motu* without the matter being raised by a member in the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ப்ரிவிலெஜ் சம்பந்தப்பட்டதை உறுப்பினர் எழுப்பித்தான் சொல்ல வேண்டும் என்ற நிலை இல்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படுகிற நேரத்தில், சபாநாயகருக்கே இது உரிமை மீறிய நிகழ்ச்சி என்று தெரிந்தால், அவரே

எழுப்பலாம். உரிமை மீறல் நிகழ்ச்சி மட்டுமல்ல; இதில் பேரவைத் தலைவரையே அவமதித்த ஒரு நிகழ்ச்சி இருக்கிறது. பேரவைத் தலைவரை அவமதித்தது இந்தப் பேரவையையே அவமதித்ததாகும். பேரவைத் தலைவரைத் தாக்கிப் பேசுவது என்கிற நிகழ்ச்சி உரிமை மீறிய செயலாகும். அதுகுறித்துத்தான் தீர்ப்பு வழங்கியிருக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவரே உரிமை மீறுகிற நிலைமை ஏற்பட்டால் அதற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரே உரிமை மீறியதற்கு என்ன நடவடிக்கை எடுப்பதென்பதற்கு ஏற்கெனவே ஒரு முன் உதாரணம் இருக்கிறது. ஆகவே, அதைப் பற்றி இப்பொழுது பேசவேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுது பேரவைத் தலைவர் உரிமை மீறினாரா என்பது பிரச்சினை அல்ல. ஏற்கெனவே உள்ளவர் மீறி அதற்கான நடவடிக்கை எல்லாம் எடுக்கப்பட்டுவிட்டது. இதற்குத் தண்டனை வழங்கவேண்டியதாக இருந்தாலும், அப்படித் தண்டனை வழங்காமல், மிகப் பெருந்தன்மையாகத் தாங்கள், இனிமேல் அப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு வேண்டுகோள் தான் விடுத்திருக்கிறீர்கள். அதை வைத்துக்கொண்டு மேலும் பேசுவது அவ்வளவு நல்லதல்ல.

திரு. கே. ஏ. மதியழகன் : மெஜாரிடி இருக்கிறதென்ற காரணத்தால், பேரவைத் தலைவர் தண்டனை வழங்கியிருக்கலாம் என்று முதலமைச்சரவர்கள் மிரட்டவேண்டாம். இது தண்டனை பற்றியதல்ல. இந்த அவையின் உரிமையைப் பேரவைத் தலைவரே காப்பாற்றவில்லையென்றால், அதற்கு என்ன பரிகாரம் என்பதற்குத் தாங்கள் தீர்ப்பு வழங்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கெல்லாம் பரிகாரம் சட்டமன்ற விதிகளில் இடம் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : மெஜாரிடியிலுள்ளவர் ஒன்று சொன்னால் அதை மைனாரிடியினர் கேட்டுக்கொண்டுதான் இருக்க வேண்டுமா? பரிகாரமே கிடையாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பரிகாரம் விதிகளில் இருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : தாங்கள் இதுபற்றித் தீர்ப்பு வழங்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1956-ம் ஆண்டில் இதே சபையில் திரு. விநாயகம் அவர்கள் மீது ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டு, தீர்மானம் ஏதும் வராமல், பேரவைத் தலைவரே இப்படிப்பட்ட தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

இப்பொழுது உறுப்பினர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்ற பெயரில் எழுந்து, அது பாயின்ட் ஆஃப் ஆர்டராக இல்லாமல், அவையிலுள்ள பிரச்சினைக்கு மாறான நிலையில் கருத்துக்களை ஒரு உறுப்பினர் கூறினால், 'அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல' என்று பேரவைத் தலைவர் தெரிவிக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் பேசிய பேச்சுக்கள் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காகப் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' எழுப்ப வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், வேண்டுமென்றே 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று எழுந்து எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லாமல் வேறு கருத்துக்கள் கூறப்பட்டு இருக்குமானால், அப்படிப்பட்ட பேச்சுக்களெல்லாம் நம்முடைய பேரவைக் குறிப்பில் இடம் பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்றேன்.

இப்பொழுது திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசலாம்.

2. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ் : நேற்றையதினம் நான் கூறியவற்றைத் தொடர்ந்து பேச விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25 நிமிடங்கள் தாங்கள் பேசியிருக்கிறீர்கள். நான் முன்பு சொன்னதைப் போல் அது உங்கள் கட்சிக்கு ஒதுக்கியிருக்கும் நேரத்திற்குள் வரும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நேற்று நான் கூறியதுபோல் பெரியகுப்பம் கிராமத்தில் போலீசார் அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்பதைத் தங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு